**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

ஆணை எண்: 170/பேரூ/2022
நாள்: 02.11.2022

திரு. S. செல்வகுமார்,
தென்காசி மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சிங்கம்புணரி பேரூராட்சி. ... எதிர்மனுதாரர்

தென்காசி, வடக்கு ஒப்பனை தெரு, எண்.96ல் வசிக்கும் திரு. S. செல்வகுமார் என்பவரின் 30.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.10.2022-ல் பெறப்பட்டு 170/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி, வடக்கு ஒப்பனை தெரு, எண்.96ல் வசிக்கும் திரு. S. செல்வகுமார் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

"தென்காசி மாவட்டம் சிங்கம்புணரி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. அமு.ஜான் முகம்மது அவர்களால் மாதாமாதம் ரூ.8950/–ல் இருந்து ரூ.9950/–க்குள் பில் போட்டு பொருட்களே வாங்காமல் பில்கள் மட்டும் வாங்கப்பட்டு பில் கொடுத்துள்ள நிறுவனங்களுக்கு பேரூராட்சியில் இருந்து நிறுவனத்தின் பெயரில் செக் கொடுக்கப்பட்டு நிறுவனத்தாரால் செக் தொகையில் 10 சதவீதம் முதல் 20 சதவீதம் வரைக்கும் கமிஷன் எடுத்துக்கொண்டு மீதி தொகை பேரூராட்சி நிர்வாகத்திடம் கொடுக்கப்படுகின்றன.

2022–2023ம் ஆண்டுக்கான பொருட்கள் சப்ளைக்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி என்ற பெயரில் தகுதியே இல்லாத பல நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டு பொருட்கள் எதுவும் வாங்காமல் பில்கள் மட்டும் வாங்கப்படுகின்றன.

பேரூராட்சி இயக்குநர் சுற்றறிக்கை எண் 1/2008/இ2/நாள் 25.01.2008 மற்றும் 3416/2013/ஊ1/நாள் 28.06.2013 சுற்றறிக்கையின் நகல்களின்படியும் ஒப்பந்தப்புள்ளி நடத்தாமல் தங்களுக்கு வேண்டிய நிறுவனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள்.

சிங்கம்புணரி பேரூராட்சியில் பிளிச்சிங் பவுடர், பினாயில், சுண்ணாம்புதூள், கொசுமருந்துகள், பொதுசுகாதார தளவாட பொருட்கள் போன்ற இனங்களுக்கும் புல் வெட்டுதல், குழிதோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல், ஜேசிபி இயந்திரம் வாடகைக்கு எடுத்தல், கணினி பராமரிப்பு, கணினி டோனர் ரீபிள் செய்தல், மின்மோட்டார் பழுது நீக்கம், குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள் இனங்களுக்கு GST வரி கட்டும் நிறுவனங்களிடம் பில் வாங்காமல் பேரூராட்சி அலுவலக உதவியாளர் பேரூராட்சியில் பணி செய்யும் பணியாளர்களை வைத்து வெள்ளை பேப்பரிலும் ஜி.எஸ்.டி பதிவு இல்லாத, வரி கட்டாத ஏதோ நிறுவனத்தின் பெயரில் போலியாக பில் தயார் செய்து போலியான பெயரில் செக் கொடுத்து பேரூராட்சி நிர்வாகத்தினரே முறைகேடு செய்கின்றார்கள்.

சிங்கம்புணரி பேரூராட்சியில் 2019–2020, 2020–2021, 2021–2022ம் மார்க்கெட் விலையை விட மிக அதிக விலைக்கு சோலார் உயர் கோபுர விளக்குகள் ( 6 எண்ணம் பிட்டிங்ஸ் உள்ளது), தெரு விளக்கு எல்இடி விளக்குகள், நீம் ஆயில் (ECOCLEAN 50 PLUS) போன்ற இனங்களுக்கு பேப்பர் விளம்பரம், ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொதுநிதியில் இருந்து பல கோடிகளுக்கு வாங்கப்பட்டு மிக பெரிய அளவில் முறைகேடு நடைபெற்றுள்ளன.

பேரூராட்சிகளின் தரம் வாரியாக (பொதுசுகாதார பொருட்கள் வாயிலாக சுகாதார ஆய்வாளர் அல்லது சுகாதார பணி மேற்பார்வையாளர் மூலம்), (தெரு விளக்கு பொருட்கள் வாயிலாக மின் பணியாளர் மூலம்), (குடிநீர் குழாய் பொருட்கள் வாயிலாக பிட்டர் அல்லது பம்பு ஆப்பரேட்டர் மூலம்) செக் எழுதும் அலுவலக உதவியாளர் மூலம் மாதம் ரூபாய் 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரைக்கும் பேரூராட்சி பொதுநிதியில் இருந்து பேரூராட்சி நிர்வாகம் மிகபெரிய அளவில் முறைகேடுகள் செய்து வருகின்றன. பணம் பிரிக்கப்படும் பங்குகள் பற்றிய விவரம், பேரூராட்சி இயக்குநர் அலுவலகம் சென்னை பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகம், பேரூராட்சி செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலக உதவியாளர், பொருட்கள் இருப்பு பதிவேடுகள் பராமரிப்பு செய்யும் சம்மந்தப்பட்ட துறை பணியாளர் மற்றும் பேரூராட்சி மன்றம்.

2020–2021, 2021–2022, 2022–2023 ஆண்டு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நிறுவனங்களை நேரில் அழைத்தும், பைல்கள் மற்றும் பில்களை வாங்கியும் ஆராய்ந்து

பொருட்களே வாங்காமல் பில் மட்டும் வாங்கும் பேரூராட்சி நிர்வாகம் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேற்காணும் முறைகேட்டை முற்றிலும் ஒழிக்க தற்பொழுது பேரூராட்சியால் நடைபெறும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி முறையை ரத்து செய்து பேரூராட்சிக்கு தேவைக்கான பொருட்களுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து E-TOKEN DIGITAL SIGNER TENTER TWO COVER SYSTEM முறையிலும் ஜி.எஸ்.டி. பதிவு பெற்ற நிறுவனங்களிடம் விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி வாங்கியும் பணிக்கான பில்தொகை நிறுவனத்தின் பெயரில் கோடிட்ட காசோலையாக வழங்க பேரூராட்சிக்கு உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட முறையீடுகள் அனைத்தும் மாவட்ட உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகம், பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம் ஆதரவுடன் நடைபெறுகின்றது. தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் பேரூராட்சிகளில் தகவல் கோரினால் பேரூராட்சிசெயல் அலுவலர்கள் ஏதாவது ஒரு விதியை காரணம் தெரிவித்து பதில் தர இயலாது என்று ஒரு வரியில் தகவல் கேட்ட 30 நாட்கள் கழித்து ஒரு வரியில் பதில் தருகின்றார்கள்" என்று தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி சிங்கம்புணரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

**3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 13.10.2022 அன்று தென்காசி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

4) மனுதாரர் 13.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

> சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி பேரூராட்சியில் 2022–23ம் ஆண்டிற்கான பொருட்கள் சப்ளைக்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி என்கின்ற பெயரில் தகுதியே இல்லாத பல நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டு பொருட்கள் எதையும் வாங்காமல் பில்கள் மட்டும் வாங்கி அதற்கான தொகையை பேரூராட்சி அலுவலர்களே எடுத்துக்கொண்டுள்ளனர்.
>
> மேலும் பினாயில், பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள், கொசு மருத்து, பொது சுகாதார தளவாட பொருட்கள் போன்ற இனங்களுக்கும், புல் வெட்டுதல், குழி தோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல், ஜே சி பி இயந்திரம் வாடகைக்கு எடுத்தல் போன்ற இனங்களுக்கு GST வரி கட்டும் நிறுவனங்களிடமிருந்து பில் வாங்காமல், GST பதிவு இல்லாத, வரி கட்டாத ஏதோ நிறுவனத்தின் பெயரில் பில் தயார் செய்து

போலியான பெயரில் செக் கொடுத்து பேரூராட்சி நிர்வாகனத்தினரே முறைகேடு செய்துள்ளனர் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒப்பந்தப் புள்ளிகளை கோரும் போதும், பல்வேறு முறைகேடுகள் சிங்கம்புணரி பேரூராட்சியில் நடைபெற்று வருகிறது. பேப்பர் விளம்பரம் ஏதும் செய்யாமல் ஒரு சில குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொது நிதியிலிருந்து அதிக அளவில் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட பெரிய அளவில் முறைகேடுகள் சிங்கம்புணரி பேரூராட்சியில் நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட முறைகேடுகளைக் களைய E Token Digital Signer Tender Two Cover முறையை அனைத்து பேரூராட்சிகளிலும் நடைமுறைப் படுத்திடவும், மேலும் சிங்கம்புணரி பேரூராட்சியில் நடைபெற்ற முறைகேடுகளுக்கு காரணமான பேரூராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 30.9.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**5) சிங்கம்புணரி பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 13.10.2022 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்** :

"சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி பேரூராட்சியில் ஒப்பந்தப் புள்ளிகளை கோரும்போது முறையாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டும், நோட்டீஸ் போர்டில் இடம்பெற செய்தும் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2020 ம் ஆண்டிற்கான ஒப்பந்தம் 20.2.2020 அன்றும், 2022ம் ஆண்டிற்கான விளம்பரம் 14.6.2022 அன்றும் நாளிதழ்களில் இடம்பெற செய்யப்பட்டுள்ளது என்பதையும், கோவிட் பெருந்தொற்று காரணமாக 2021ம் ஆண்டிற்கு பத்திரிகையில் பேரூராட்சியால் விளம்பரம் செய்யப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான விளம்பர நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் பிளிச்சிங் பவுடர் மற்றும் லைசால் ஆகியவறறை தண்ணீரில் கலந்து கொரானா காலத்தில் தெருக்கள் மற்றும் வீடுகளுக்கு மருந்து தெளிக்கப்பட்டது. இதுபோன்ற கிருமிநாசினி போன்ற பொருட்கள் அவசர அவசியத்தை முன்னிட்டு உதவி இயக்குநரின் அனுமதி பெற்று சம்பந்தப்பட்ட நிறுவங்களிடமிருந்து வாங்கப்பட்டு, அதற்கான தொகை கோடிட்ட காசோலை மூலம் வழங்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு என்னால் சமர்ப்பிக்கப்பட்ட எனது 13.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**6) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு சிங்கம்புணரி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. அவர், தனது 13.10.2022 நாளிட்ட அறிக்கையில்,**

பார்வை-1ல் காணும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களின் முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்களுக்கு கீழ் கண்டுள்ளவாறு விளக்கம் அளிக்கப்படுகிறது.

1) புகார் மனு பத்தி 1இல் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ஜான்முகமது அவர்களால் மாதம் மாதம் ரூ.8950.00ல் இருந்து 9950.00க்குள் பில் போட்டு பொருட்களே வாங்காமல் பில்கள் மட்டும் வாங்கப்பட்டு பில் கொடுத்துள்ள நிறுவனங்களுக்கு பேரூராட்சியில் இருந்து நிறுவனத்தின் பெயரில் செக் கொடு.க்கப்பட்டு நிறுவனத்தாரால் செக் தொகையில் 10 சதவீதம் முதல் 20 சதவீதம் வரைக்கும் கமிஷன் எடுத்துக் கொண்டு மீதி தொகை பேரூராட்சி நிர்வாகத்திடம் கொடுக்கப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கம்புணரி பேரூராட்சியில் ஆண்டு ஒப்பந்தம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான தொகை வழங்குவதற்கு சேவை வரியுடன் கூடிய பட்டியல் பெறப்பட்டு அதற்கான தொகைக்கு கோடிட்ட காசோலை சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது. மேலும் புகாரில் தெரிவித்துள்ள படி பொருட்கள் வாங்காமலும் பணிகள் செய்யாமலும் கமிஷன் தொகை வேண்டி எவ்வித பணிகளுக்கும் பட்டியல் பெறப்படுவதில்லை. மேலும் அனைத்து செலவு சீட்டுகளும் மன்ற கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு உறுப்பினர்களால் முழுமையாக கண்காணித்து ஒப்புதல் வழங்கப்படுகிறது என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2) புகார் மனு பத்தி 2இல் 2022-23ம் ஆண்டுக்கான பொருட்கள் சப்ளைக்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி என்ற பெயரில் தகுதியே இல்லாத பல நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டு பொருட்கள் எதுவும் வாங்காமல் பில்கள் மட்டும் வாங்கப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கம்புணரி பேரூராட்சியில் 2022-23ம் ஆண்டிற்கு பொருட்கள் சப்ளை செய்ய உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு முறையாக இவ்வலுவலக ந.க.எண்.165/2022 நாள்:14.06.2022இன் படி செய்தி தொடர்பு மக்கள் அலுவலருக்கு நாளிதழில் விளம்பரம் செய்ய கோரி கடிதம் அனுப்பப்பட்டு அதனடிப்படையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் ந.க.எண்.106/ஒப்பந்தபுள்ளி/விளம்பரம்/2015 நாள்:16.06.2022ன் படி தமிழ் சுடர் நாளிதழில்

17.06.2022 இன் படி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இ டோக்கன் (இணைய வழி) மூலம் டெண்டர் செடியூல் பதிவேற்றம் செய்யப்பட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டது மற்றும் கடந்த ஆண்டு ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்ட அனைத்து நிறுவனங்களுக்கும் பதிவு தபால் மூலம் ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்தபுள்ளி நாளான 29.06.2022 அன்று இ டோக்கன் மூலம் ஒப்பந்தப்புள்ளி திறப்பு (Bid opening) செய்ததில் இணைய வழியில் யாரும் கலந்துகொள்ளவில்லை. அனைத்து இனங்களுக்கும் நேரடியாக மட்டுமே 12 நிறுவனங்கள் ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ளனர். அவற்றில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய நிறுவனங்களுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத்தினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வொப்பந்தப்புள்ளியில் புகார்தாரருக்கு அறிவிப்பு கடிதம் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளவில்லை. மேலும் புகார்தாரர் அறிவிப்பு கடிதம் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை பெறப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3) புகார் மனு பத்தி 3இல் பேரூராட்சி இயக்குநர் சுற்றறிக்கை எண்.1/2008/இ2 நாள்:25.01.2008 மற்றும் 3416/2013/ஊ1 நாள்:28.06.2013 சுற்றறிக்கையின் நகல்களின்படியும் ஒப்பந்தப்புள்ளி நடத்தாமல் தங்களுக்கு வேண்டிய நிறுவனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள்.

இப்பேரூராட்சியில் புகார் மனு பத்தி 2இல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படி முறையாக விதிமுறைகளுக்குட்பட்டு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளியே நடத்தப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

4) புகார் மனு பத்தி 4இல் சிங்கம்புணரி பேரூராட்சிகளில் பிளிச்சிங் பவுடர், பினாயில், சுண்ணாம்பு தூள், கொசு மருந்துகள், பொது சுகாதார தளவாட பொருட்கள் போன்ற இனங்களுக்கும் புல்வெட்டுதல், குழிதோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல் ஜேசிபி இயந்திரம் வாடகைக்கு எடுத்தல், கணினி டோனர், ரீபிள் செய்தல், மின்மோட்டார் பழுது நீக்கம், குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள் இனங்களுக்கு GST வரி கட்டும் நிறுவனங்களிடம் பில் வாங்காமல் பேரூராட்சி அலுவலக உதவியாளர் பேரூராட்சியில் பணி செய்யும் பணியாளர்களை வைத்து வெள்ளை பேப்பரிலும் GST பதிவு இல்லாத, வரிகட்டாத ஏதோ நிறுவனத்தின் பெயரில் போலியாக பில் தயார் செய்து போலியான பெயரில் செக் கொடுத்து பேரூராட்சி நிர்வாகத்தினரே முறைகேடு செய்கின்றார்கள்.

சிங்கம்புணரி பேரூராட்சியில் பிளிச்சிங் பவுடர், பினாயில், சுண்ணாம்பு தூள் கொசு மருந்து பொது சுகாதார தளவாட சாமான்கள் போன்ற இனங்களுக்கு வருடாந்திர ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள நிறுவனங்களிடம் இருந்தே பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகிறது. பொருட்களுக்கு சேவை வரியுடன் கூடிய (GST) பட்டியல் பெறப்பட்டு தொகை வழங்கப்படுகிறது.

மேலும் ஜெ.சி.பி. இயந்திரம் மாவட்ட ஆட்சியர் சிவகங்கை அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்குரிய ஜெ.சி.பி. இயந்திரமே இப்பேரூராட்சியில் பெரும்பாலான பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அவரை அத்தியாவசிய காலங்களில் மட்டுமே பிற ஜெ.சி.பி. இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் இவ்வலுவலகத்தில் கணிணி பிரிண்டர்கள் உள்ளதால் ஜெராக்ஸ் அலுவலகத்திலே எடுக்கப்பட்டு வருகின்றது. ஏதேனும் அரசு நலத்திட்டம் சார்பாக கூடுதலான ஜெராக்ஸ் தேவைக்கு வெளியில் எடுக்கப்படுகிறது. மற்றும் டோணர்கள் ரீபில் மட்டுமே வெளியில் செய்யப்படுகிறது. குடிநீர் மின் மோட்டார்கள் ஆண்டு ஒப்பந்தம் பெற்ற வேளாண் பெறியியல் அரசு நிறுவனத்திடமே பழுது நீக்கம் செய்யப்படுகிறது. அதனைத் தொடர்ந்து குடிநீர் குழாய் பழுதுகள் ஏற்படும் பொது ஆண்டு ஒப்பந்தம் பெற்ற நிறுவனம் மூலம் பழுதுகள் சரிசெய்யப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

5) புகார் மனு பத்தி 5இல் சிங்கம்புணரி பேரூராட்சியில் 2019-2020, 2020-2021, 2021-22 ஆண்டில் மார்க்கெட் விலையை விட மிக அதிக விலைக்கு சோழார் உயர் கோபுர விளக்குகள் (6 எண்ணம் பிட்டிங்ஸ் உள்ளது), தெரு விளக்கு எல் இ டி விளக்குகள், நீம் ஆயில் (ECO CLEAN 50 PLUS), கொசு மருந்துகள், பேப்பர் விளம்பரம், ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொது நிதியில் இருந்து பல கோடிகளுக்கு வாங்கப்பட்டு மிக பெரிய அளவில் முறைகேடு நடைபெற்றுள்ளன.

சிங்கம்புணரி பேரூராட்சியில் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைப்படி மின் சிக்கனத்தை கருத்தில் கொண்டும் மற்றும் மின் கட்டணத்தை குறைக்கும் பொருட்டும் பொது மக்கள் அதிக அளவில் கூட கூடிய இடங்களில் சோளார் மின் விளக்கு முறையாக விலைப்புள்ளிகள் பெறப்பட்டு மேற்குறிப்பிட்ட மூன்று ஆண்டுகளில் கீழ்கண்ட விவரப்படி 8 எண்ணம் பொருத்தப்பட்டுள்ளது. அதற்கு மன்ற தீர்மானம் பெறப்பட்டு உதவி இயக்குநரிடம் பட்டியல் மேலொப்பம் பெறப்பட்டுள்ளது.

| வருடம் | எண்ணிக்கை | தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 2019-20 | 4 | 26.40 |
| 2020-21 | 1 | 6.60 |
| 2021-22 | 1+2 மினி | 8.27 |

மேலும் மின் சிக்கனம் மற்றும் மின் கட்டணத்தை குறைக்கும் பொருட்டு 40 வாட்ஸ் குழல் விளக்குகளை மாற்றி குறைந்த வாட்ஸ் கொண்ட எல் இ டி விளக்குகள் குறைந்த எண்ணிக்கையில் கொள்முதல் செய்யப்பட்டு தெரு விளக்குகளுக்கு பயன்படுத்தப்பட்டு இன்று வரை பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதற்கான பட்டியல் தொகை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று கீழ்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

| வருடம் | எண்ணிக்கை | தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 2020-21 | 5 கம்பம் மற்றும் பிட்டிங் | 7.45 |
| 2020-21 | 68 லைட் பிட்டிங் | 7.05 |

இப்பேரூராட்சியில் மனுதாரர் தெரிவித்துள்ள ஆண்டுகளில் கொரோனா பரவல் அதிகமாக இருந்த காலத்தில் பேரூராட்சி உதவி இயக்குநர் அவர்களின் ஆணைக்கிணங்க பிளச்சிங் பவுடர் மற்றும் லைசால் தண்ணீரில் கலந்து தெருக்கள் மற்றும் வீடுகளில் தெளிக்கப்பட்டது. கிருமி நாசினி கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்ட காலத்தில் பேரூராட்சிசிளின் இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரை மற்றும் சுகாதார துறையினரின் அறிவுரைப்படியும் ECOCLEAN 50 PLUS வெவ்வேறு காலங்களில் கொள்முதல் செய்யப்பட்டு அவசர அவசிய கொரோனா காலத்தினை கருத்தில் கொண்டு குறைந்த அளவில் கொள்முதல் செய்து துயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான தொகை முறையாக கனி அலுவலரின் ஒப்புதல் பெற்று பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு கோடிட்ட காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளது. இக்காலங்களில் கொரோனா பாதிப்பு இருந்ததால் பொது மக்கள் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு விலைப்புள்ளிகள் பெற்று பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது என பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

| வருடம் | லிட்டர் | தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 2020-21 | 25 | 0.77 |
| 2020-21 | 25 | 0.77 |
| 2020–21 | 25 | 0.77 |
| 2020–21 | 100 | 5.66 |
| 2020–22 | 300 | 16.99 |

6) புகார் மனு பத்தி 6இல் பேரூராட்சிகளின் தரம் வாரியாக (பொது சுகாதார பொருட்கள் வாயிலாக சுகாதார ஆய்வாளர் அல்லது சுகாதார பணி மேற்பார்வையாளர் மூலம்), (தெரு விளக்கு பொருட்கள் வாயிலாக மின் பணியாளர் மூலம்), (குடிநீர் குழாய் பொருட்கள் வாயிலாக பிட்டர் மூலம்) மாதம் ரூபாய் 5 லட்சம் முதல் 10 லட்சம் வரைக்கும் பேரூராட்சி பொது நிதியில் இருந்து பேரூராட்சி நிர்வாகம் மிகப்பெரிய அளவில் முறைகேடுகள் செய்து வருகின்றன. பணம் பிரிக்கப்படும் பங்குகள் பற்றிய விபரம், பேரூராட்சி இயக்குநர் அலுவலகம் சென்னை, பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகம், பேரூராட்சி செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலக உதவியாளர்

பொருட்கள் இருப்பு பதிவேடுகள் பராமரிப்பு செய்யும் சம்மந்தப்பட்ட துறை பணியாளர் மற்றும் பேரூராட்சி மன்றம்.

சிங்கம்புணரி பேரூராட்சியில் இது போன்ற நிகழ்வுகள் நடைபெறுவதில்லை. மேலும் பத்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அனைத்து இனங்களுக்கும் சேர்ந்தே 09/2022ம் மாதம் ரூ.3.50 இலட்சம் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சராசரியாக மாதம் ஒன்றுக்கு ரூ.5.00 இலட்சத்திற்கு குறைவாகவே பொருட்கள் கொள்முதல் செய்வது மற்றும் பொருட்கள் சரிசெய்வது நடைபெற்று வருகிறது. இப்பத்தியில் சுட்டிக்காட்டியுள்ள படி மிகையான செலவினங்கள் ஏதும் செய்யப்படவில்லை. மேலும் தேவையான பொருட்கள் மட்டும் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான தொகை முறையாக வழங்கப்பட்டுள்ளது. இதில் எந்த ஒரு அலுவலகங்களுக்கும் தொகை வழங்குவதில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

7) புகார் மனு பத்தி 7இல் 2020-2021, 2021-2022, 2022-2023 ஆண்டு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நிறுவனங்களை நேரில் அழைத்தும், பைல்கள் மற்றும் பில்களை வாங்கியும் ஆராய்ந்து பொருட்களே வாங்காமல் பில் மட்டும் வாங்கும் பேரூராட்சி நிர்வாகம் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பத்தியில் சுட்டி காட்டப்பட்டுள்ள 2020-21, 2021-22ம் ஆண்டிற்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ள சந்திரா ஏஜென்ஸிஸ் நிறுவனமே வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெற்று இப்பேரூராட்சிக்கு தேவையான பொருட்கள் சப்ளை செய்துள்ளனர் மற்றும் நடப்பு ஆண்டிற்கு அந்நிறுவனம் ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ளவில்லை முறையாக 2022-23ஆம் ஆண்டில் ஒப்பந்தம் பெற்ற நிறுவனத்திடம் இருந்து தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு சேவை வரியுடன் பில்கள் பெற்று தொகை வழங்கப்பட்டுள்ளது. இச்செலவினம் அனைத்தும் தற்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்களால் கண்காணிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

8) புகார் மனு பத்தி 8இல் மேற்காணும் முறைகேட்டை முற்றிலும் ஒழிக்க தற்பொழுது பேரூராட்சியால் நடைபெறும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி முறையை ரத்து செய்து பேரூராட்சிக்கு தேவைக்கான பொருட்களுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து E-TOKEN DIGITAL SIGNER TENTER TWO COVER SYSTEM முறையிலும் ஜி.எஸ்.டி. பதிவு பெற்ற நிறுவனங்களிடம் விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி வாங்கியும் பணிக்கான பில்தொகை நிறுவனத்தின் பெயரில் கோடிட்ட காசோலையாக வழங்க பேரூராட்சிக்கு உத்திரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சியில் இப்பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டும், E-TOKEN DIGITAL SIGNER TENTER முறையிலும் பதிவேற்றம் செய்யப்பட்டும், அலுவலக விளம்பர

பலகையில் ஒட்டப்பபட்டும் மேலும் ஏற்கனவே பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்கள், உரிமைதாரர்களுக்கு அறிவிப்பு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டு ஜி.எஸ்.டி பதிவு பெற்ற நிறுவனங்களிடம் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி வாங்கி பணிக்கான பில்தொகை நிறுவனத்தின் பெயரில் கோடிட்ட காசோலையாக வழங்கப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பேரூராட்சிகளில் தகவ. கோரினால் பேரூராட்சி செயல் அலுவலகர்கள் ஏதாவது ஒரு விதியை காரணம் தெரிவித்து பதில் தர இயலாது என்று ஒரு வரியில் தகவல் கேட்ட 30 நாட்கள் கழித்து ஒரு வரியில் பதில் தருகின்றார்கள் என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் கேட்கப்படும் தகவல் பெறும் உரிமைச் சட்டக் கேள்விகள் அனைத்தும் தொழில் போட்டி காரணமாக மூன்றாம் நபர் சார்ந்த கேள்விகள் கேட்கப்படுவதால், தகவல் பெறும் உரிமைச் சட்ட விதிகளின்படி தகவல் பெற இயலாது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிங்கம்புணரி பேரூராட்சியில் புகார்தாரர் தெரிவித்துள்ளபடி எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. அன்னார் சார்ந்த நிறுவனத்திற்கு நடப்பு ஆண்டில் ஆண்டு ஒப்பந்தம் கிடைக்காத காழ்ப்புணர்ச்சியில் இதுபோன்ற புகார் தெரிவித்துள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், சிங்கம்புணரி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தமது மனுவில் **சிங்கம்புணரி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. அ.மு. ஜான் முகமது** மாதா மாதம் ரூ.8950ல் இருந்து ரூ.9950க்குப் பில் மட்டும் போட்டு பொருட்கள் வாங்குவதில்லை என்றும் அத்தொகைக்கு 10 முதல் 20 சதவீதம் கமிஷன் எடுக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். அதே போல் தகுதியே இல்லாத நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டு பொருள் வாங்காமல் பில் போடப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சி இயக்குநரின் சுற்றறிக்கையின்படி ஒப்பந்தபுள்ளி நடத்தாமல் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஒப்பந்தபுள்ளி கொடுப்பதாகவும், பேரூராட்சியில் பிளிச்சிங் பவுடர், பினாயில் சுண்ணாம்பு தூள், கொசு மருந்து, தளவாட பொருள், புல் வெட்டுதல் குழி தோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல் ஜே.சி.பி. இயந்திரம் வாடகைக்கு எடுத்தல் போன்ற இனங்களுக்கு GST வரி கட்டும் நிறுவனங்களிடம் பில் வாங்குவதில்லை என்றும் GST பதிவு இல்லாத வரி கட்டாத நிறுவனங்களின் பெயரில் போலியாக பில் போடுவதாக கூறியுள்ளார்.

2019 முதல் 2022 வரை உயர்கோபுர விளக்கு அமைத்தல் எல்.இ.டி விளக்குகள் வாங்கியதில் பெரிய அளவில் முறைகேடு நடந்துள்ளது என்றும் மேலும் 2020-ஆம் ஆண்டிலிருந்து 2022-2023–ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்ட நிறுவனங்களை நேரில் அழைத்து பேசி ஆராய்ந்து பொருட்களை வாங்காமல் பில் மட்டும் வாங்குவதாக தெரிவித்து இவ்வாறு முறைகேட்டில் ஈடுபட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மனுதாரர் கோரியுள்ளார்.

மேலும் மனுதாரர் 13.10.2022 நாளிட்ட நேரடி விசாரணையிலும் இதே குற்றச்சாட்டுகளைத்தான் **சிங்கம்புணரி பேரூராட்சியின்** மீது சுமத்தியுள்ளார்.

**சிங்கம்புணரி இரண்டாம்நிலை பேரூராட்சிக்கு** 2020–21, 2021–22 மற்றும் 2022–23 ஆகிய மூன்று ஆண்டுக்கான பொது சுகாதாரம், குடிநீர் திட்டம் மற்றும் இதர பொருட்கள் சப்ளை செய்ய செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக நாளிதழில் பிரசுரம் மேற்கொண்டும் முந்தைய சப்ளைதாரர்களுக்கு கடிதம் வாயிலாக வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டும் அதன்பேரில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டும் அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிகள் பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்திடமிருந்து அவ்வப்போது தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது என்பதை செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மேலும் **சிங்கம்புணரி பேரூராட்சியில்** 2019–2020 ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தில் சூரிய சக்தியில் இயங்கும் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் பணி மேற்கொள்ள அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு 20.09.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த செல்வராஜ் & கோ, திருச்சி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு சூரிய சக்தியில் இயங்கும் உயர்கோபுர மின்விளக்கு அமைக்கப்பட்டுள்ளதும் அறிக்கையின் மூலம் தெரியவருகிறது.

**சிங்கம்புணரி பேரூராட்சிக்கு** கொள்முதல் செய்யப்படும் பொதுசுகாதாரப்பொருட்கள் அனைத்தும் பேரூராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டம், பொதுசுகாதாரம், டெங்கு/கொரோனா நோய்த்தடுப்பு பணிக்கு அவசிய மற்றும் அத்தியாவசிய தேவைக்கேற்ப அவ்வப்போது வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கப்பட்டு இருப்பு பதிவேட்டில் முறையே பதிவு செய்யப்பட்டு அவ்வப்போது எடுத்து பொதுமக்களுக்கு தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை பணி மேற்கொள்ளும் பொருட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் அறிய முடிகிறது.

மேலும் மனுதாரரான சந்திரா ஏஜென்சீஸ் நிறுவனம் கடந்த **2016–2017** ஆம் ஆண்டு முதல் **2021–22** ஆகிய 6 வருடங்கள் **சிங்கம்புணரி பேரூராட்சியில்** வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்டு, அதில் குறைந்த விலைப்புள்ளிதாரராக இருந்து வந்து பொது சுகாதார பொருட்கள் 6 வருட காலமாக தொடர்ந்து, **சிங்கம்புணரி பேரூராட்சியில்** வருடாந்திர

ஒப்பந்தப்புள்ளிதாரராக இருந்து பொருட்கள் விநியோகம் செய்து வந்துள்ளார் என்பதையும் விசாரணையின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரர் தனது மனுவில் **சிங்கம்புணரி** பேரூராட்சி செயல் அலுவலர் மாதா மாதம் ரூ.8950ல் இருந்து ரூ.9950க்குள் பில் போட்டு பொருட்கள் வாங்காமல் பில் மட்டும் வாங்கப்பட்டு அத்தொகைக்கு 10 சதவிகிதம் முதல் 20 சதவிகிதம் கமிஷன் பெறுவதாக தெரிவித்துள்ளார். இவர் புகாராக **சிங்கம்புணரி பேரூராட்சி** செயல் அலுவலரை மட்டும் குறிப்பிடவில்லை. **ஆலங்குளம், ஆயக்குடி, சிவகிரி, குற்றாலம் மற்றும் திருவேங்கடம் ஆகிய பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள்** மீதும் இதே குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். **ஒரே தொகையை** எவ்வாறு மற்ற பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மீதான குற்றச்சாட்டாக குறிப்பிட முடியும். இது கற்பனைக்கு எட்டாத விஷயமாக உள்ளது. மேலும் எந்த நிறுவனத்திற்கு பட்டியல் தொகை கொடுக்கப்பட்டது; என்ன பொருட்கள் வாங்க பட்டியல் தொகை கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை மனுதாரர் குறிப்பிடவில்லை. இக்குற்றச்சாட்டிற்கு எந்தவிதமான ஆதார ஆவணத்தையும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை.

2022–2023–ஆம் ஆண்டுக்கான பொருட்கள் சப்ளைக்கு தகுதியே இல்லாத பல நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டு பட்டியல் தொகை கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் பொருட்கள் வாங்கவில்லை என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் குறிப்பிட்டு எந்த ஒரு நிறுவனத்தின் பெயரையும் மனுதாரர் குறிப்பிடவில்லை, எந்த பொருளுக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் அவர் தெரிவிக்கவில்லை.

**சிங்கம்புணரி பேரூராட்சியில்,** பிளிச்சிங் பவுடர், பினாயில் போன்ற சுகாதாரப் பொருட்கள் வாங்குவதில் மற்றும் புல் வெட்டுதல், குழி தோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல், ஜே.சி.பி. இயந்திரம் வாடகைக்கு எடுத்தல், குடிநீர் குழாயில் ஏற்படும் பழுதுகள் போன்ற இனங்களுக்கு G.S.T. வரி கட்டும் நிறுவனங்களிடம் பில்வாங்கவில்லை என்றும், GST பதிவு இல்லாத வரி கட்டாத நிறுவனங்களின் பெயரில் போலியாக பில் தயார் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார். இக்குற்றசாட்டிலும் வரி கட்டும் GST நிறுவனம் எது, வரி கட்டாத போலியான GST பதிவு இல்லாத நிறுவனம் எது, எந்த போலியான நிறுவனத்தில் பில் தயார் செய்யப்பட்டது என்ற விவரத்தையும் மனுதாரர் குறிப்பிடவில்லை. இதற்கான ஆதார ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கப்படவில்லை.

**சிங்கம்புணரி பேரூராட்சியில்** மார்கெட் விலையைவிட அதிக விலை கொடுத்து சோலார் உயர் கோபுர விளக்குகள் (6 எண்ணப் பிட்டிங்ஸ் உள்ளது) தெரு விளக்கு LED விளக்குகள் நீம் ஆயில் போன்ற இனங்களுக்கு பேப்பர் விளம்பரம், ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொது நிதியில் வாங்கப்பட்டதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். இதிலும் ஒரு குறிப்பிட்ட நிறுவனம் என்றுதான் தெரிவித்துள்ளார். நிறுவனத்தின் பெயரை குறிப்பிடவில்லை. ஆதார ஆவணங்கள் எதையும் இந்த குற்றச்சாட்டிற்கும் சமர்ப்பிக்கப்படவில்லை.

பேரூராட்சியின் பொது நிதியில் இருந்து பொது சுகாதாரப் பொருள், தெருவிளக்கு, குடிநீர் குழாய் பொருட்கள் வாங்குவதில் தரம் வாரியாக ரூ.5 லட்சம் முதல் 10 லட்சம் வரை முறைகேடுகள்

நடப்பதாக தெரிவித்துள்ளார். மேற்கண்ட புகார் குறித்து தரம் வாரியாக யார் பெயரையும் குறிப்பிடவில்லை. ஆதார ஆவணங்கள் எதையும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை.

2020 ஆம் ஆண்டு முதல் 2022-2023 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நிறுவனங்களை நேரில் அழைத்தும் பைல்கள் மற்றும் பில்களை வாங்கியும் ஆராய்ந்து பொருட்களை வாங்காமல் பட்டியல் தொகை மட்டும் வாங்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார். இதிலும் எந்த நிறுவனத்திடம் பட்டியல் தொகை வாங்கப்பட்டது என்ற விவரம் இல்லை. மேற்சொன்ன குற்றசாட்டுகள் அனைத்தும் **சிங்கம்புணரி பேருராட்சியில்** மட்டும் நடைபெறவில்லை. **சிங்கம்புணரி பேருராட்சி** உட்பட மேற்குறிப்பிடப்பட்டுள்ள 5 பேருராட்சிகளிலும் நடைபெறுவதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். குற்றச்சாட்டுகள் அனைத்தையும் ஆதார ஆவணமின்றி மனுதாரர் சுமத்தியுள்ளார். இவை ஏற்க கூடியதாகவும் நம்பக்கூடியதாகவும் இல்லை.

வருடாந்திர ஒப்பந்த முறையை ரத்து செய்து பேருராட்சிக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து E Token Digital Signer Tender Two Cover System முறையை தெரிவித்துள்ளார். ஆனால் The Tamil Nadu Transparency in Tenders Act, 1998 (Tamil Nadu Act of 1998) Chapter – V 18 (3) ல் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது,

> **[ (3) The Tender Inviting Authority shall permit the submission of tenders by post or courier or by electronic submission through the designated website, wherever applicable, provided that the Tender Inviting Authority shall not be responsible for any delay in transit in such cases.]**

மேலும் மனுதாரர் (சந்திரா ஏஜென்சி நிறுவனம்) 2016-17ஆம் ஆண்டிலிருந்து 6 – ஆண்டுகள் **சிங்கம்புணரி பேருராட்சியில்** வருடாந்திர ஒப்பந்தபுள்ளிகளில் கலந்துகொண்டு குறைந்த விலைப்புள்ளிதாரராக இருந்து பொது சுகாதார பொருட்களை விநியோகம் செய்து வந்துள்ளார்.

இவருக்கு ஒப்பந்தபுள்ளியில் கலந்துகொள்ளும் முறைகள் அனைத்தும் தெரிந்திருக்க வேண்டும், தெரியவில்லை என்றால் **சிங்கம்புணரி பேருராட்சியில்** 6 ஆண்டுகள் எவ்வாறு குறைந்த விலை புள்ளிதாரராக இருந்திருக்க முடியும் ? எனவே, மனுதாரர் வேண்டுமென்றே, பேருராட்சியின் மீது பொய்யான குற்றசாட்டுகளை சுமத்தியுள்ளார். இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. ஒரே மாதிரியான குற்றசாட்டுகளை அதே புள்ளி விபரங்களோடு 6 பேருராட்சி நிர்வாகத்தின் மீது சுமத்தியுள்ளார். இச்செயல் கண்டனத்திற்குரியது; மேலும் தமது குற்றசாட்டுகள் ஒன்றிற்கு கூட மனுதாரரால் ஆதார ஆவணத்தை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் இவரால் 6 பேருராட்சி நிறுவனங்களின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஆதார ஆவணங்களற்ற குற்றச்சாட்டுகள் என்று இம்முறைமன்றம் முடிவு செய்து பேருராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று இம்மனு மீதான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்க முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இங்ஙனம் ஆதாரமற்றக் குற்றச்சாட்டுக்களை 6 பேரூராட்சிகள் மீதும் சுமத்தியது மனுதாரருக்கு அழகல்ல என இம்முறைமன்றம் கருதுகிறது.

எனினும் **சிங்கம்புணரி பேரூராட்சியில்** கொள்முதல் செய்யப்படும் பொது சுகாதாரப் பொருட்கள் அனைத்தும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு GST வரி கட்டி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கப்பட்டு இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு முறையாக பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்பதை உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் உரிய ஆய்வு செய்து முறைகேடுகள் நடைபெற்றிருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை துறை இயக்குனருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு.S. செல்வகுமார்,
சந்திரா ஏஜன்ஸிஸ்
96, வடக்கு ஒப்பனை தெரு,
தென்காசி – 627 811.
2. செயல் அலுவலர்,
சிங்கம்புணரி பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தென்காசி மாவட்டம்.
4. பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர்,
சென்னை–28.
5. இணை இயக்குநர் (பொது) மற்றும்
ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.